بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# jamaat ul sahih al islam – tamil nadu



*ஹஸ்ரத் கலீ:பத்துல்லாஹ்*
*முனீர் அஹ்மது அஸீம் (அலை)*

## ஜுமுஆ பேருரை

தலைப்பு :

**துஆக்கள் (பிரார்த்தனைகள்)**

**(பாகம் -1)**

***10 July 2020***

**(18 DHUL - QADDAH 1441 AH)**

*வெளியீடு*

*அமீர்,*

*ஜமா அத் தமிழ்நாடு*

***Phone No:- 917502272774***

# Duwhs (Invocations) (Part - 1)

## துஆக்கள் (பிரார்தனைகள்) பாகம் - 1

உலகனைத்திலும் உள்ள தனது தோழர்களுக்கும் மற்றும் எல்லா முஸ்லீம்களுக்கும் ஸலாத்தினைத் தெரிவித்ததை தொடர்ந்து தஷஹ்ஹுத், தஅவ்வூது மற்றும் அல்.ஃபாத்திஹா ஓதியபிறகு **ஹஸ்ரத் கலீ.ஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜும்மா பேருரையியை நிகழ்த்தினார்கள்.

**"துன்பத்திற்காளானவர் அவனிடம் பிரார்த்திக்கும் போது, அவருக்குப்பதிலளித்து, (அவரது) தீங்கை அகற்றி, உங்களை இப்பூமி முழுவதற்கும் வாரிசுகள் ஆக்குபவன் எவன்? அல்லாஹ்வுடன் வேறு கடவுள் உண்டா? நீங்கள் அறவே உணர்வதில்லை" (27:63)**

அல்லாஹ்வின் பண்புகளைக் குறித்து விவரித்துக் கூறியபின் அல்லாஹ்விடமான பிரார்த்தனைகள் குறித்த தொடர் பேருரைகளை நான் இன்று முதல் தொடங்குகிறேன். மேலும் அல்லாஹ்வின் பண்புகளை பற்றிய எனது தொடர் பேருரைகளை நீங்கள் நன்கு புரிந்து கொண்டிருப்பீர்கள் என்றும் நான் நம்புகிறேன.

உங்களுக்கு முன் நான் ஓதிக்காண்பித்த இறை வசனங்களின் ஒளியில் பார்த்தால், அல்லாஹ் அவனுடை அருளாலும் அவனுடைய ஆதரவாலும் எனக்குக் கற்றுக் கொடுத்த சில துஆக்களை உங்களுக்கு நான் கற்றுக்கொடுப்பேன். தனிப்பட்ட முறையில் கூறினால், அல்லாஹ் கடந்த காலங்களில் தனது தேர்ந்தெடுக்கபட்ட அடியார்களுக்கும் இத்தகைய துஆக்களை அதேபோன்று கற்றுக்கொடுத்திருந்தான். இந்த துஆக்களை நீங்கள் கவனமாகக் கேட்டுக் கொள்வதோடு உங்கள் உள்ளங்களில் ஆமீன் என்று கூறும்படியும் உங்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அல்லாஹ்வே என் மனதைத் திறந்து, என் மனதையும் என் இதயத்தையும் அறிவொளிவூட்டியதுடன் அவனை அழைத்து நான் மான்றாடும் பொருட்டு இந்த அசாதாரண வார்த்தைகளை அவன் என் நாவில் போட்டான். என்னைப்

பொறுத்தவரை, நான் என் எஜமானனின் வாசலருகில் நிற்கும் ஒரு யாசகன் ஆவேன். அவனுடைய கிருபையினாலும் தயவினாலும் தான் அவனை எவ்வாறு அழைத்து மன்றாட வேண்டும் என்பதை எனக்கு அவன் கற்றுக் கொடுத்தான். இந்த பிரார்த்தனைகள் ஏற்கவே இருந்தாலும் கூட, அவற்றின் இருப்புக் குறித்து எனக்குத் தெரியாமல் இருந்தாலும் அவற்றை எனக்கு கற்ப்பித்திருப்பது எனது எஜமானினுடைய மாபெரும் கருணையாகும். நிச்சயமாக இவை அசாதாரணமான பிரார்த்தனைகளாகும். எனவே நான் எனது இறைவனுக்கு மிகவும் நன்றியுள்ளவனாக இருக்க வேண்டும் மேலும் இந்த துஆக்கள் அனைத்தையும் அல்லாஹ் எனக்கு கற்பித்ததில் நான் அதிர்ஷ்டசாலியாவேன் அல்ஹம்துலில்லாஹ்.

அல்லாஹ்வே நான் மிகவும் பலவீனமானவன், பாவங்கள் நிறைந்தவன். என்னை முழ்கடிக்கும் பலவீனங்கள் காரணமாக ஒவ்வொரு நாளும் நான் பாவங்களைச் செய்கிறேன். அல்லாஹ்வே என் எல்லா பாவங்களையும் என்னிடமிருந்து கழுவவும், என்னிடமுள்ள தவறுகளிலிருந்து என்னைத் தூய்மைப்படுத்தவும், உள்ளத்தின் இறையச்சத்தால் எனது உள்ளத்தைச் சோதிக்கவும் உன்னிடம் நான் மன்றாடுகிறேன். இறைவா நீயே பாவிகளின் தடுமாற்றத்தை நீக்குபவனாவாய்.

என் இறைவா! நான் உன்னை மட்டுமே நம்புகிறேன். நான் உன்னிடம் மட்டுமே முறையிடுகிறேன். நான் உன்னிடம் மட்டுமே அடைக்கலம் தேடுகிறேன். உன்னுடைய அடையாளங்களைத் தவிர எந்த வெளிச்சமும் பிரகாசமும் எனக்கில்லை. எனவே மக்களின் சீர்திருத்திற்காகவே நீ என்னை அனுப்பியிருக்கிறாய் என்றால், உனது சக்தியால் என்னை மீட்டெடுத்து, உண்மையாளர்களுக்கு உனது ஆதரவை நீ வழங்கியது போல உனது ஆதரவை நீ எனக்கும் வழங்குவயாக! நீ என்னை நேசிக்கிறாய் என்றால், என் மீது உனது அன்பை வைத்திருக்கிறாய் என்றால் இழந்தவனைப்போல என்னை நிராகரித்துவிடாதே! நீ என்னை விட்டு விலகி சென்றால், என்னை யார் நன்கு பாதுகாக்க முடியும் ஏனென்றால் அனைவருக்கும் மிகச் சிறந்த பாதுகாவலனாக இருப்பவன் நீ அல்லவா? எனவே என் சிரமங்களையாவும் நீக்கிவிடுவாயாக! என்னை கேலி மற்றும் ஆட்சேபரனச் செய்வதற்கு என் எதிராளிகளுக்கு நீ

வாயப்பளித்துவிடாதே! அவநம்பிக்கையாளர்களுக்கு எதிராக நீ எனக்கு உதவி புரிவாயாக! என் இறைவா! நீ எங்களுக்கு அளித்த உதவிகளுக்கு நான் எவ்வாறு நன்றி செலுத்த வேண்டும்? குற்றவாளிகளின் வெறுப்பையும் அவர்கள் உன் தீனுல் இஸ்லாமின் மீது காட்டிய ஆணவத்தையும் நீ குறைத்து கொண்டாய்! உனது ஏகத்ததுவததின் மீது நம்பிக்கை கொண்டதன் காரணமாக அவர்கள் எங்களது சகோதர சகோதரிகளை துன்புறுத்தவும், உயிர்துறக்கவும் செய்தார்கள். நீ அந்த தீயவர்களின் பெருமை மற்றும் ஆணவத்தினை குறைத்து தூசியாக்கிவிட்டாய். உனது பிரசன்னத்திற்கு முன்பு நீ அவர்களை உதவியற்றவர்களாக ஆக்கியுள்ளாய், அதற்கு நாங்கள் நேரடி சாட்சிகளாக இருந்தோம்.

அல்லாஹ்வே! மிகவும் இரக்கமுடையவனே! நூஹ் நபி (அலை) அவர்களின் காலத்தில் நீ பலமக்களை அழித்ததற்குப் பின்னர் நீ அவர்கள் மீது கருணை காட்டியதற்கும் எங்கள் ஆன்மா சாட்சியமளிக்கிறது. ஆகவே அதை போலவே எங்களது தற்போதைய காலத்திலும் இந்த பூமியிலுள்ள எல்லா மக்களையும் நீ மன்னித்துவிடுவாயாக! நீ அவர்களை அழித்துக்கொண்டே இருந்தால், உன்னை அடையாளம் கண்டுகொள்வதற்கும் உன் மீது நம்பிக்கைகொள்வதற்கும் யார் எஞ்சுவார்கள்? உனது அடையாளங்கள் மீதும், நீ தேந்தெடுத்த உனது இந்த ஊழியன் மீதும் யார் நம்பிக்கை கொண்டு வருவார்கள்? உனது மன்னிப்பைப்பெற யார் உன்னை அழைத்து பிரார்த்தனை செய்வார்கள்? இறைவா! வரவிருக்கும் பேரழிவிலிருந்தும் அவர்கள் யாவரையும் விடுவிப்பாயாக!

அல்லாஹ்வே, வல்லமை மிக்கவனே! உனது அடியார்களிடம் அவர்களுடைய எல்லா சோதனைகளின் போதும் அவர்கள் வாழும் எல்லா இடங்களிலும் அவர்களுடன் இருப்பாய் என்று நீ வாக்குறிதியளித்திருந்ததைப் போலவே அவர்களின் ஒவ்வொரு கட்டத்திலும், அவர்களின் ஒவ்வொரு அடியிலும், அவர்களின் ஒவ்வொரு எதிரிக்கு எதிராகவும் நீ அவர்களுக்கு துணை புரிந்தாய், பரிசுத்த ஆவியால் நீ அவர்களுக்கு உதவி செய்தாய்.

அல்லாஹ்வே, வல்லமைமிக்கவனே! அதே போலவே எல்லா சோதனைகளுக்கும் எதிராக நான் உனது உதவியைக் கேட்கிறேன். ஒவ்வொரு

அடியிலும் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு எதிரிக்கும் எதிராக எனக்கு உதவிபுரிவாயாக! பரிசுத்த ஆவியால் நீ எனக்கு துணை புரிவாயாக! மேலும் உனது ஜமா அத்திற்காகவும் உனது தீனுல் இஸ்லாத்திற்காகவும், மனிதகுலத்திற்காகவும், நான் எடுக்கின்ற ஒவ்வொரு முடிவும் உன்னிடமிருந்து மட்டும் வரும் உனது வழிகாட்டுதலாக அமைத்துக்கொள்வாயாக! இத்தகைய முடிவுகளை எடுப்பதில் உன்னால் மட்டுமே எனக்கு வழிகாட்ட முடியும்.

எனது இறைவா! எனது இறைவா! எனது மக்களைப் பற்றி எனது துஆக்களை கேட்பாயாக! எனது இறைவா! ஒட்டுமொத்த மொரிஷியஸ் மக்கள், அனைத்து மனித குலம் மற்றும் முஹம்மதியா உம்மத்தைச்சார்ந்த எனது அனைத்து முஸ்லீம் சகோதர்களைப் பற்றிய எனது வேண்டுதல்களுக்கு நீ செவிசாய்ப்பாயாக! காத்தமுன் நபியினும் பரிந்துரை செய்பவருமாகிய உனது திரு நபி (ஸல்) அவர்களதுப் பெயரை நான் எடுத்துக் கொண்டு, அவர்கள் மூலமாக நான் உன்னிடம் கேட்கிறேன், எனது இறைவா! இருளிலிருந்து அவர்களை அகற்றி உனது ஒளியின் பக்கம் அவர்களை ஈர்த்துக் கொளவாயாக! உன்னிடமிருந்து, உன் ஒளியிலிருந்து, உண்மையான வழியிருந்து அவர்களை வேறுபடுத்தும் அந்த தூரத்தை அகற்றி அவர்களை உன்னிடம் நெருங்கச் செய்வாயாக!

அல்லாஹ்வே என் மீது சாபங்களை கொட்டிய, என் மீது குற்றங்களை சாட்டிய மக்கள் மீது நீ கருணை காட்டுவாயாக! மேலும் உன்னிடமிருந்து வரவிருக்கும் இந்த அழிவிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவாயாக! (உன்னிடமிருந்து பேரழிவு வரயிருக்கிறது)

எனது இறைவா! நீதியை அவர்களின் உள்ளத்தின் ஆழத்தில் வைத்து, அவர்கள் புரிந்த தவறு மற்றும் பாவங்களை புறக்கணித்து அவர்களை மன்னித்து விடுவாயாக! அவர்களைப் பாதுகாப்புடன் வைத்திருப்பாயாக! அவர்கள் உண்மையைக் காணக்கூடிய அத்தகைய கண்கள் மற்றும் அவர்கள் கேட்கக்கூடிய அத்தகைய காதுகளை நீ அவர்களுக்கு வழங்குவாயாக! மேலும் அவர்கள் புரிந்துக்கொள்ளக் கூடிய அத்தகைய இதயம் மற்றும் உண்மையையும் பொய்யையும் வேறுபடுத்தி அறியக் கூடிய அத்தகைய ஒளியினை அவர்களுக்கு

வழங்குவாயாக! அவர்கள் மீது இரக்கம் காட்டுவாயாக! அல்லாஹ்வே, அவர்கள் என்னைப்பற்றி என்ன சொன்னாலும் அதன் மீது இணக்கத்துடன் செயல்படுவாயாக! ஏனென்றால் அவர்கள் அறியாத மக்களாகவும் அறிவற்ற மக்களாகவும் உள்ளனர்.

அல்லாஹ்வே உனது உன்னத தூதர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் செய்து வந்த அதே பிரார்த்தனைகளை நீ எனக்குக் கற்றுக் கொடுத்தாய் அந்த பிரார்த்தனை இதுவாகும். **“ரப்பி அஹ்தீ கவ்மீ ஃபஇன்னஹுும் லா யஃலமூன்”** (எனது இறைவா, எனது மக்கள் புரிந்துக் கொள்ளாதவர்களாக உள்ளான். அவர்களுக்கு நீ வழிகாட்டுவாயாக)

(இந்த பிரார்த்தனைக்குறித்து நான் உங்களுக்கு ஒரு சிறிய விளக்கம் தருகிறேன். வேண்டுமென்றே தீங்கு செய்பவர்களுக்காக அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இப்பிரார்த்தனையை செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள். ஆனால் திரு நபி (ஸல்) அவர்களின் இந்த பிரார்த்தனை வேண்டுமென்றே தீங்கிழைப்போர்களுக்கு ஒருபோதும் ஆதரவாக அமைந்ததில்லை. இந்த தீய மக்களுக்காக திரு நபி (ஸல்) அவர்கள் கீழ்வருக்கின்ற பிரார்த்தனையை செய்துவந்தார்கள் **“அல்லாஹுும்மப ஸாஹிக்கும் தஸ்ஹிக வலா தஸர் அல் அர்லி மினல் காஃபிரீன ஷரீரா”** எனவே அவர்களைப் பற்றிய (அவர்களிடையே “ஷரீர்ராக” இருந்தவர்கள் அதாவது வேண்டுமென்றே தீங்கிழைத்தவர்கள்) இந்த பிரார்த்தனையாது அவர்களுக்கு எதிராகவும் அவர்களின் அழிவிற்குரியதாகவும் இருந்தது.

**எனது இறைவா! ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களுடையவும், உனது உயரிய அந்தஸ்தைப் பற்றி அறிந்துள்ள எல்ல நேர்மையான நம்பிக்கையாளாகளுடையவும், இரவில் விழித்திருந்து பிரார்த்தனைகளில் முழ்கியிருப்போர்களுடையவும், தங்கள் நப்ஸுக்கு எதிராக பகலில் ஜிஹாதில் ஏர்படுவோர்களுடையவும் மற்றும் தங்கள் பாவங்கள் அனைத்திலிருந்தும் மனந்திரும்புவதற்காக இரவை பிரார்த்தனைக்காக ஒதுக்கி வைக்கும் பயணிகளுடையவும் எஜமானனே! எனது இறைவனே! இவர்கள் எனது சகோதரர்களாவார்கள். ஆகவே அவர்களை மன்னித்து சீர்திருத்துவாயாக!**

அவர்களின் கண்களைத் திறந்து அவர்களின் உள்ளங்களை ஒளிரச் செய்வாயாக! நீ எனக்குக் காட்டிய அனைத்தையும் அவர்களுக்குப் புரியவைப்பாயாக! உனது நேசத்திற்குரிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்து கற்பித்ததை அவர்களுக்கு மீண்டும் நினைவூட்டுவதற்காக இந்த பூமியில் உனது சொந்த பிரதி நிதியாகவும், முஜத்தீதாகவும் முஹைத்தீனாகவும் மற்றும் கலீ·.பத்துல்லாஹ்வாகவும் இந்த நூற்றாண்டில் நீ அனுப்பியுள்ள இந்த தாழ்மையான ஊழியனை அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளச் செய்வாயாக! நிச்சயமாக இது திரு நபி (ஸல்) அவர்கள் காட்டித்தந்த அதே பாதையாகும். சேதமடைந்துவிட்ட இந்த பாதையை சரி செய்வதற்காக மட்டுமே நான் தோன்றியுள்ளேன். இதனால் இருளின் துளைக்குள் விழ்ந்து விடாமல் தக்வாவுடன் உன் பாதையை நோக்கி அவர்களை அழைத்து செல்ல முடியும். அவ்வாறேயானால், அவர்கள் உன்னிடமிருந்து மிக சிறந்த வெகுமதிகளை பெற்றுவிடுவார்கள். மேலும் நீ அவர்களிடமும் அதை போலவே அவர்கள் உன்னிடமும் (அவர்கள் உன் முன் தோன்றும் நாளில்) மகிழ்ச்சியடைவார்கள்.

படைப்பினங்களின் எஜமானே! அனைத்து ஆற்றல்களும் வழிபாடுகளும் உனக்கே உரியது. சத்தியம் எங்கு அழிக்கப்படுகிறதோ, அங்கு உன்னிடமிருந்து அத்தகைய ஒரு அத்தாட்சியை வெளிப்படுத்துவாயாக! அவ்வாறேயானால் படைப்பினங்களுக்கு சத்தியத்தின் பாதையில் பயணம் மேற்கொள்ள முடியும். எனது இறைவா! எல்லா வகையான தவறான புரிதல்களையும், அனைத்து விவாதங்களையும், எல்லா வேறுபாடுகளையும் முடிவுக்கு கொண்டு வந்து, அவர்கள் அனைவரையும் உனது ஏகத்துவத்தின் கீழும். நீ தேர்ந்தெடுத்த தூரர்களின் கீழும் ஒன்றுபடசெய்வாயாக.

எனது இறைவனே! எனது அன்பிற்குரியவனே! உனது அழகான பார்வை மிகவும் கூர்மையான வாள் போன்றது அவ்வாளானது அவ நம்பிக்கையாளாகள் எனக்கு ஏற்படுத்தும் வலியை நீக்குகிறது. உன்னிடம் வந்து சேர நாங்கள மண்ணோடு மண்ணாக தயாராக உள்ளோம், உன்னிடமிருந்து பிரிந்திருப்பது மிக பெரிய வலியை விளைவிக்கிறது.

நீ இல்லாமல் எனக்கு ஒரு கணம் கூட அமைதி இல்லை ஒரு நோய்வாய்பட்ட மனிதனை போலவே உன்னிடம் வந்து சேர என் இதயம் துடிக்கிறது. என் இதயம் எவ்வாறு துடித்துகொள்கிறதே அதேபோலவே என் வாழ்க்கையும் துடிக்கிறது. அல்லாஹ்வே என் மீது நீ பார்வையிடுவாயாக! உன்னை அழைத்து உனது அருகில் நின்று சத்தம் போட்டு மன்றாடுவது யார் என்று பார்பாயாக! உனது நேசன் ஆகிய என்னை, உனது அன்புக்குரிய அடியான் ஆகிய என்னை கொலை செய்யப்படுமாறு கைவிட்டு விடாதே!

சகோதர சகோதரிகளே! எவர் (அல்லாஹ்வின் வழியில்) புழுதியோடு புழுதியாக கரைந்து விட முன் வருகின்றாரோ அவரை அல்லாஹ் தன்னுடன் சேர்த்துக் கொள்ளவான். இல்லையெனில், வெளியில் இருக்கும் (இந்த இணைப்பிற்கு அப்பால்) அத்தகையோர்களை அவன் ஒருபோதும் கவனிக்கமாட்டான். எவர் அல்லாஹ்வுக்குரியவராகி விடுகின்றாரோ, அவருக்கு அல்லாஹ்வும் உரியவனாகி விடுகின்றான். எவர் அவனுக்கு முன்பாக தன்னை கட்டுப்படுத்திக் கொள்கின்றாரோ, அவரே அவனிடம் தஞ்சமடைந்து கொண்டவர்.

பூக்களைப் பாருங்கள், அவன் காரணமாகவே அவற்றில் பிராகசம் மற்றும் அழகும் இருக்கிறது அவனது ஒளியால் தான் சூரியனும் சந்திரனும் கூட பிரகாசிகின்றது.

அல்லாஹ்வே! உனது அழகை எங்களுக்கு காட்டுவாயாக, உனது முகம் எவ்வளவு காலம்தான் மறைந்திருக்கும்? நான் கூற விரும்புகிறேன், அல்லாஹ்வே உன் மீது என்னை நேசம் கொள்ள வைத்த உனது அழகிய முகத்த நீ அவர்களுக்கும் காட்டுவாயாக! இன்ஷா அல்லாஹ் ஆமீன். நான் இன்று இங்கு இதனை நிறுத்துகிறேன். அடுத்த வாரமும் இந்த அழகான துவாக்களைப் பற்றி பேருரையைத் தொடர அல்லாஹ் எனக்கு தவ்.ீ.பீக் வழங்கட்டும். இன்ஷா – அல்லாஹ்.

**EDITING & PUBLISHING ARE DONE BY**

***AMIR***

***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***

**TAMIL NADU**

**Ph No: 917502272774**

**Translated by:**

**S.H. Faisal**
**&**
**Azim Ahmad**